அறநிலையங்களால் நடத்தப்பட்டுவரும் மருத்துவ மனைகள்

*355. வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்கு விடையளிப்பாரா?

தமிழ்நாட்டில், இந்து அறநிலையத் துறையினரால் நடத்தப்பட்டுவரும் சித்த வைத்திய சாலைகளில் B. I. M. பட்டம் பெற்ற வைத்தியர்கள் எத்தனை பேர் பணியாற்றி வருகிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நான்கு பேர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

திரு. சொ. காவேரி மணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியான பயிற்சி நிலையங்கள் நம்முடைய மாநிலத்தில் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? அவ்வாறு உள்ள பயிற்சி நிலையங்கள் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பயிற்சி நிலையங்களைப் பற்றி அல்ல கேள்வி. சித்த வைத்திய சாலைகளைப் பற்றி கேள்வி கேட்டிருக்கிறார்கள், மொத்தம் கோவில்கள் சார்பில் நடத்தப்படுகின்ற சித்த வைத்திய சாலைகள் 18 ஆகும். சென்ற ஆண்டு 26 மருத்துவ மனைகள் துவங்க வேண்டும் என்று துறையிலிருந்து அனுமதி கொடுக்கப் பட்டிருந்தாலும், நான்கு மருத்துவமனைகள்தான் கோவில்கள் சார்பில் துவக்கியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அதிகப்படியாக துவங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, அறநிலையங்களிலிருந்து நடத்தப்படும் மருத்துவமனைகள் நான்கு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவை எங்கெங்கு இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, நான்கு என்று சொல்லவில்லை. 18 என்று சொன்னேன். 1972-ல் ஆரம்பிக்கப் பட்டது நான்காகும். அவை தஞ்சை மாவட்டத்தில் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவமனைகளுக்கு ஆகும் செலவை முழுக்க முழுக்க அற நிலைய பாதுகாப்பு இலாக்கா ஏற்றுக்கொள்ளுகிறதா அல்லது மருத்துவ இலாக்கா விலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கோவில் நிதியிலிருந்துதான் செலவு செய்யப்படுகிறது.

1973 மார்ச் 13]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டாரிடம் ஏராளமாக பணம் இருக்கிறது. ஆதலால் இந்த மருந்தகங்கள் அவர்கள் நடத்த ஏதாவது ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, எதிர்காலத்தில் அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவ மனைகள் பழைய காலத்திலிருந்திருக்கின்றன. இதனால் எந்த வியாதிகள் தீர்க்கப்படுகின்றன என்று மக்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. எனவே முதலில் அதுகுறித்து மக்கள் அறிவதற்கு போதிய விளம்பரம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே விஷயம் அறிந்தவர் ஆதலால், அவரே இந்தப் பணியைச் செய்தால் நலமாக இருக்கும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்ற நேரத்திலே 18 இடங்களிலே சித்த மருத்துவ மனைகள் நடைபெற்று வருவதாகச் சொன்னார்கள். நான்கு இடங்களில் பி. ஐ. எம். பட்டம் பெற்றவர்கள் மருத்துவர்களாக இருப்பதாகச் சொன்னார்கள். மற்ற மருத்துவ மனைகளை யார் கவனித்துக்கொள்ளுகிறார்கள்? தகுதியில்லாதவர்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மற்ற மருத்துவ மனைகளில் பணியாற்றுகின்ற மருத்துவர்கள் தகுதியில்லாதவர்கள் என்று சொல்லமுடியாது. ஏற்கெனவே பல ஆண்டுகளாக அந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்கள்தான் மருத்துவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் திண்டுக்கல்லுக்குப் பக்கத்திலிருக்கிற கோவிலில் நீண்ட நாள் அனுபவம் பெற்ற மருத்துவரைத் தான் சித்த வைத்தியராக நியமித்திருக்கிறார்கள். நாள்தோறும் நூற்றுக் கணக்கான நோயாளிகள் அங்கு வந்து சிகிச்சை பெற்று செல்லுகிறார்கள். 1971-ம் ஆண்டுக்கு முன்னால் சித்த வைத்திய துறையில் பட்டம் பெற்றவர்கள், அவர்கள் கோவில்களிடத்தில் மனுச் செய்துகொண்டார்கள். அவற்றைப் பரிசீலித்து புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நான்கு மருத்துவ மனைகளில் அத்தகைய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

---

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*)வெள்ளிக் குறியிடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

3 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு - தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மருத்துவ மானியக் கோரிக்கையை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் ..........

2 நடைமுறைக் கேள்வி

தமிழரசுக் கழக உறுப்பினருக்கு முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே. ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களில், எதிர்கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் நம் எதிரே இருக்கின்ற முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னத்தில் வெற்றி பெற்ற நண்பர் திரு. தியாகராசன் என்பவருக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் தமிழரசு கழகத்தின் சார்பில் இந்த மன்றத்தில் இருக்கிறார் என்று நீங்கள் சொல்லுவீர்களேயானால், இந்த மன்றத்தில் குடியரசு கட்சியின் சார்பில் இருந்த ஒரே உறுப்பினரான திரு. கே. பி. எஸ். மணிக்கு பின்னால் இடம் ஒதுக்கப்பட்டது. ஆகவே, திரு. தியாகராசன் அவர்களுக்கு எந்த அடிப்படையில் முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உதய சூரியன் சின்னத்தில் வெற்றி பெற்றவர் தியாகராசன் மாத்திரமல்ல. நண்பர் அவர்களும் இந்தச் சின்னத்தில்தான் வெற்றி பெற்றார் என்பதை மறந்திருக்க மாட்டார் என்று கருதுகிறேன். ஏற்கெனவே சோஷலிஸ்டு கட்சியின் சார்பில் திரு. நல்லசிவம் அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் ஒருவராக இருந்த நேரத்தில் கூட முன்வரிசையில் அவருக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ஒரு சஜஷன் கொடுக்க விரும்புகிறேன். உண்மையாக எதிர்கட்சியிலிருப்பவர்களுக்கு முதல் வரிசையில் இடமும், தோழமை கட்சியைச் சேர்ந்த ஆளுங்கட்சி சின்னத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பின் வரிசையில் இடமும் ஒதுக்கப்பட்டால், பின்னால் இருக்கிற உபதலைவர்களுக்கு முன் வரிசைக்கு வர வாய்ப்பிருக்கும். இந்த சஜஷனை தயவு செய்து அரசு ஆலோசிக்குமா ?